தமிழ் நாடு சட்டப் பேரவை

புதன்கிழமை, 1973 நவம்பர் 21.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **புலவர் கா. கோவிந்தன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

Special Course in Botany

* 249 *Q.*—Thiru N. DENNIS: Will the Hon. the Minister for Educational and Tourism be pleased to state—

(*a*) whether any special 60 days course on Physiological Pathology was conducted at the Advanced Centre in Botany at the Madras University during December 1972; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர். இரா. நெடுஞ்செழியன்:

(அ) ஆம்.

(இ) இப் பயிற்சி "யுனெஸ்கோ", பல்கலைக் கழக மானியக் குழு ஆகியவற்றின் ஆதரவினால் சென்னைப் பல்கலைக் கழகத்தினால் நடத்தப்பட்டது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே, இந்த விசேஷப் பயிற்சியில் எத்தனை ஆசிரியர்கள் அல்லது பேராசிரியர்கள் கலந்து கொண்டார்கள், எத்தனை மாணவர்கள் கலந்து கொண்டார்கள் என்ற விவரத்தை அமைச்சரவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, 1—12—1972 முதல் 30—1—1973 வரையில் 60 நாட்கள் அந்தப் பயிற்சி நடத்தப்பட்டது. 11 பேர்கள் பல்வேறு மாநிலங்களிலிருந்தும் வேறு பல நாடுகளிலிருந்தும் சிறப்பாக வந்து கலந்து கொண்டார்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி : இம் மாதிரியான பயிற்சி மதுரைப் பல்கலைக் கழகம் போன்ற மற்ற பல்கலைக் கழகங்களிலும் தொடங்க உத்தேசம் இருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதுபற்றி குறிப்பு இல்லை. "யுனெஸ்கோ" கேட்டுக் கொண்டதன் காரணமாகவும் பல்கலைக்கழக மானியக்குழு இதற்கு உதவி செய்ய முன் வந்ததன் காரணமாகவும் இப் பயிற்சி சென்னைப் பல்கலைக் கழகத்தினால் நடத்தப்பட்டது. அதுமாதிரி பயிற்சியை மற்ற பல்கலைக் கழகங்களிலும் நடத்த யூனெஸ்கோ முன்வந்து, பல்கலைக்கழக மானியக்குழு உதவி தருமானால் அந்தப் பல்கலைக் கழகங்களிலும் ஏற்பாடு செய்யலாம்.

முதியோர் கல்வி நிலையங்கள்

*** 250 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1966-67-ல் தமிழகத்தில் முதியோர் கல்வி நிலையங்கள் எத்தனை இருந்தன ?

(இ) 1973 மே வரை எத்தனை முதியோர் கல்வி நிலையங்கள் புதிதாகத் துவக்கப்பட்டன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) 384, (இ) 1967-68-ம் ஆண்டில் 60 உழவர் செயல்முறை எழுத்து அறிவுத் திட்ட மையங்கள் ஃபார்மர்ஸ் ஃபங்ஷனல் லிட்ரசி சென்டர்ஸ் என்ற பெயரில் ஏற்படுத்தப்பட்டன. 1969-70-ம் ஆண்டில் முதியோர்ப் பயிற்சி மையங்கள், அடல்ட் லிட்ரஸி சென்டர்ஸ் என்ற பெயரில் 500 மையங்கள் ஏற்படுத்தப்பட்டன. இதன் பயிற்சிக் காலம் நான்கு திங்கள்கள்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, முதியோர்க் கல்வி நிலையங்களில் யார் பயிற்சி அளிக்கிறார்கள் ? அங்கு தொழிற்பயிற்சி ஏதாவது அளிக்கப்படுகிறதா ?